Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 59/2024

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 1 -வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 1 | தொழில் | - | |
| பெயர். | - | அலமேலு | வட்டம் | - | |
| க/பெ. | | சுந்தரம் | சமயம் | - | |
| கிராமம் | - | நாச்சிகுப்பம் | வயது | - | |

17.10.2025

1, 2 எதிரிகள் ஆஜர். சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்றால் 10 வருடம் ஆகபோகிறது. எந்த இடத்தில் நடந்தது என்றால் கொல்லையில் நடந்தது, 05.00 மணியிருக்கும். சம்பவம் நடக்கும் போது என்னுடன் வேறுயாராவது இருந்தார்களா என்றால் எனது வீட்டுக்காரர் இருந்தார். வேற யாரும் இல்லையா என்றால் என்னை அடிச்ச எதிர்பார்ட்டிகள் இருந்தார்கள், கல்லால் அடித்தார்கள், வீட்டு உள்ள வந்து பைப்பு எடுத்துவந்து மண்டையை தாக்கினார்கள்.

2. நான் சண்டையில் அடிப்பட்ட பிறகு நேராக நடந்து வீட்டிற்கு வந்தேனா என்றால் ஆமாம். வீட்டிற்கு வந்த போது மணி 06.00 இருக்கும். சம்பவம் நடந்த பிறகு எனது வீட்டுக்காரர் எதாவது கேட்டாரா என்றால்வீட்டுக்காரர் போய் எனது மனைவியை ஏன் அடித்தாய் என்று கேட்டதற்கு, எதிரி சேகர் அவளை சாவடிக்காம விடமாட்டேன், அவளை அடித்தே தீருவேன் என்று சொன்னார். எங்கள் நிலத்திற்கும், வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் கொஞ்ச தூரம் தான் கால் மணி நேரத்தில் போய்விடலாம்.

3. வீட்டிற்குள் வந்து அடித்தாரா என்றால் கொல்லையில் அடித்தது இல்லாமல், வீட்டிற்குள்ளம் வந்து அடித்தார்கள், என்னால் முடியவில்லை. அதன் பிறகு நான் மயக்கமாகிவிட்டேன் என்ன நடந்தது தெரியாது என்றால் ஆமாம், கொஞ்ச நேரத்தில் எழுந்துவிட்டேன், அதன் பிறகு வீட்டுக்காரர் வந்துவிட்டார், என்னை பிழைக்க வைக்க வேண்டும் என்றால் உடனே ஆஸ்பத்திரிக்கு அழைத்துக்கொண்டு செல்லுமாறு சொன்னார்கள். மருத்துவமனைக்கு 06.30 மணிக்கே கிளம்பிவிட்டோம்.

4. ஆஸ்பிட்டலுக்கு போகும் போது எனக்கு நினைவு இருந்ததா என்றால் நான் படுத்த நிலையில் இருந்தேன், தலையில் சமக்காளம் போட்டு அழுத்திருந்தேன், ரத்தம் அதில் தோய்ந்துவிட்டது. முருகன் வந்து தான் எங்களை மறித்துவிட்டார். ஆஸ்பிட்டலில் எத்தனை நாள் இருந்தேன் என்றால் 3 நாள் இருந்தேன், மறுபடியும் முண்டியம்பாக்கம் அனுப்பிவிட்டார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் நான் சேர்ந்த மறுநாளே ஆஸ்பத்திரிக்கு வந்துவிட்டார்கள்.

5. என்னை விசாரிக்க வந்த போலீசார் ஆணா, பெண்ணா என்றால் ஆண். நான் போலீசாரிடம் சொன்னதை எழுதினார்களா என்றால் நான் பெட்டில் இருக்கும்போதுஅப்போவே எழுதிவிட்டார்கள். அதன் பிறகு வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை, எனது வீட்டுக்காரரிடம் வாங்கினார்கள். என்னிடம் போலீசார் கையெழுத்து வாங்கினார்களா என்றால் 3 ம் நாள் தான் போலீசாரிடம் ரிடர்னாக வாங்கினார்கள். எனது கணவர் என்னுடன் மருத்துவமனையில் சேர்ந்தாரா என்றால் இல்லை, வீட்டில் தான் இருந்தார், எனக்கு தான் அடி அதிகம்.

6. சேகருக்கும், எங்களுக்கும் முன்விரோதம் இருந்ததா என்றால் இருந்தது, வாய் பிரச்சனையாக கொல்லைக்கு போககுள்ள, வரகுள்ள இருந்தது, நிலத்தில் வண்டி ஓட்டுவது தான் தகராறு. நான் சொல்வது போல் சம்பவம்நடைபெறவில்லை என்றாலும், எனக்கும், எதிரிகளுக்கும் முன்விரோதம் இருந்து கொண்டு பொய்யாக சொல்கிறேன் என்றால் யார் சொல்கிறது, என்னை தலையில் அடித்ததில் , தலையில் 16 தையல் போட்டுள்ளார்கள், இந்த காயத்தை என்னவென்று சொல்வது என்று சாட்சி சொல்கிறார்.

Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவெண்ணெய்நல்லூர்.

C.C. No. 59/2024

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் அ.சா. 2-வது நபரின் வாக்குமூலம். (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு. V. செல்வகோபால், Grade,III, Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 2 | தொழில் | - | |
| பெயர். | - | சுந்தரம் | வட்டம் | - | |
| த /பெ. | | சீனிவாசன் | சமயம் | - | |
| கிராமம் | - | நாச்சிகுப்பம் | வயது | - | |

17.10.2025

1, 2 எதிரிகள் ஆஜர். சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

1. நானும், சேகரும் அண்ணன், தம்பியா என்றால் இல்லை பங்காளி. எனக்கும், சேகருக்கும் நிலத்து பிரச்சனை இருக்கிறதா என்றால் நிலத்து பிரச்சனையில் தான் இந்த சண்டையே வந்தது. கரும்பு வெட்டி கொண்டு போகும் வழியில் சண்டை வந்தது. கரும்பு சேகர் நிலத்து வழியாக மேலே போகிறதா என்றால் ஆமாம்.

2. சம்பவம் என்றைக்கு நடந்தது என்றால் 08-09 வருசம் கிட்ட இருக்கும், நேரம் 06.00-06.30 மணியிருக்கும். சம்பவத்தின் போது நான் கூட இருந்தேனா என்றால் நிலத்தில் ஒரு சம்பவம் நடந்தது, கூட இல்லை, வீட்டில் ஒரு சம்பவம் நடந்தது. வீட்டில் சம்பவம் நடந்த போது நான் சேகரை அடித்தேனா என்றால் சேகரை நான் அடிக்கவில்லை, சேகர் இரும்பு பைப்பால் எனது மனைவியை அடித்தார்.

3. புகார் எப்போது கொடுத்தேன்எ ன்றால் எனது மனைவியை ஆஸ்பிட்டலில் சேர்த்துவிட்டு அன்றைக்கு நைட்டே கொடுத்துவிட்டேன். புகாரை கையால் எழுதிக்கொடுத்தேனா என்றால் போலீசார் ஆஸ்பிட்டலில் வந்து எழுதிக்கொண்டு

சென்றார்கள், நானும் எழுதிக்கொடுத்தேன். ஆஸ்பத்திரிக்கு யார் யார் சென்றார்கள் என்றால் நானும், எனது மனைவியும், ஞானவேலும் சென்றோம். எத்தனை நாள் தங்கி வைத்தியம் பார்த்தேன் என்றால் திருக்கோவிலூர் மருத்துவமனையில் அங்கு முடியவில்லை என்று சொன்னதால் முண்டியம்பாக்கம் மருத்துவமனைக்கு போனோம்.

4. எனது மனைவியை அடிக்கும் போது அவர்களை நான் தாக்க போகவில்லையா என்றால் எனது மனைவி அடிக்கும் போது அவர் ஆபத்தான சூழ்நிலையில் இருந்தார். ஆஸ்பிட்டலில் போலீசார் எப்போது வந்து விசாரித்தார்கள் என்றால் அட்மிட் செய்து 3 மணி நேரம் கழித்துவந்து விசாரித்தார்கள். போலீசார் விசாரிக்கும் போது நான் கூட இருந்தேனா என்றால் ஆமாம்.

5. போலீசார் நான் சொன்தை எழுதினார்களா என்றால் எனது மனைவி வாக்குமூலம் கொடுத்தார், எழுதிக்கொண்டார்கள், நானும் சொன்னேன். எழுதிக்கொண்டார்களா, கம்ப்யூட்டரில் டைப் செய்தார்களா என்றால் எழுதிக்கொண்டார்கள். எனக்கு அம்மா ஸ்தானத்திலிருந்து ஆஜர்எதிரி பார்த்துகொண்டார் என்றாலும், சேகர் நிலத்தின் மீது கரும்பு போனதால், அதை கேட்டுட்டு ஓட்டியிருக்கலாமே என்று எதிரிகள் கேட்டதால் பிரச்சனை என்றால் கேட்டுவிட்டு தான் ஓட்டினேன், எனக்கு கரும்பு வெட்டிய அன்று தான் அவர்களுக்கும் வெட்டினார்கள். நான் சொல்வது போல் எந்த சம்பவம் நடைப்பெறவில்லை என்றாலும், பொய்யாக அவர்களின் மீது உள்ள காழ்புணர்ச்சியால் தான் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை, கடவுளுக்கு பயந்து நியாயமாக தான் புகார் கொடுத்துள்ளேன்.

(Sd/-R.Senthilkumar)
D.M-cum-JM,
T.V.Nallur.